பாடம் 5

# காணாமற்போனவர் கண்டுபிடிக்கப்பட்டார்

***அவன் சின்னப் பிள்ளைதானே என்று பிறர் உன்னைக்குறித்துச் சொல்லும்போது உனக்கு எப்படி இருக்கும்? மிகவும் சிறப்பான ஒரு செயலைச் செய்து பிறரிடம் பாராட்டைப் பெறவேண்டுமென நீ நினைத்தது உண்டா? ஒரு சிறுவன் அரிதான காரியம் செய்ததுபற்றிப் பார்ப்போமா?***

இயேசு சந்தோஷத்தால் பரபரப்புடன் காணப்பட்டார். அவர் சிறுவனாக இருந்ததால் அவருடைய பெற்றோர் இது வரையிலும் அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்றதில்லை.

இப்போது பெற்றோர், உறவினர்கள், நண்பர்களுடன் சேர்ந்து இயேசுவின் குடும்பமும் பிரயாணம் செய்தனர். எருசலேமை நெருங்கும் வேளையில் அனைவரும் மகிழ்ச்சிப் பெருக்கால், "கர்த்தரின் ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன். எருசலேமே உன் வாசல்களில் என் கால்கள் நிற்கலாயிற்று" என்று தாவீதின் பாடலைப் பாடி, சந்தோஷத்தால் ஆர்ப்பரித்தார்கள்.

பஸ்கா பண்டிகை முடியும் வரையிலும் எருசலேமில் தங்குவதற்கான இடத்தை ஒவ்வொரு குடும்பத்தினரும் தேட ஆரம்பித்தார்கள்.

எருசலேம் தேவாலயத்தின் அழகை இயேசு கண் இமைக்காமல் பார்த்துக்கொண்டேயிருந்தார். இயேசுவின் பெற்றோர் அவரை ஆலயத்திற்கு அழைத்துச் சென்றனர். பலியிடும் இடத்திற்கு இயேசுவைப் பெற்றோர் அழைத்து வந்தனர்.

அப்போதுதான் முதன் முறையாக இயேசு அந்தப் பலி பீடத்தையும், பலிமுறைமைகளையும் பார்த்தார். ஒருநாள் தானே பலியாக்கப்படப் போவதையும் எண்ணிப்பார்த்தார்.



## மனன வசனம்

**உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவி.**

**உபாகமம் 10:12.**

உலகத்தின் பாவத்திற்காக தேவ ஆட்டுக்குட்டியாக, தான் பலி யாகப் போகும் அக்காட்சி அவரது கண்முன்னே வந்து நின்றது.

எருசலேமிலே பஸ்கா பண்டிகை முடிந்தது. மக்கள் மீண்டும் தங்களது ஊருக்குத் திரும்பலாயினர். மனநிறை வோடு தங்கள் குடும்பத்தை அழைத்துக்கொண்டு பயணித்தனர்.

மாலை வேளையில்தான் இயேசுவைத் தேடினார்கள். யோசேப்பிடம் இயேசு இருப் பாரென்று மரியாள் நினைத் திருந்தாள். மரியாளிடம் இயேசு இருப்பார் என்று யோசேப்பு நினைத்திருந்தார். இருவரிடமும் இயேசு இல்லா ததைக் கண்டு இருவரும் பதறினர். தேவனிடம் உருக்கமாக ஜெபித்தனர். உடனடியாக இயேசு வைக் கண்டுபிடிக்க எருசலேமை நோக்கிப் பயணப்பட்டனர்.

வழியிலும், சந்தை வெளியிலும் தேடிக்கொண்டே வந்தார் கள். மனதில் வேதனை படர்ந்தது. மூன்றுநாள் தேடியும் கிடைக்கவில்லை; இறுதியில் ஆலயம் சென்று அங்கே தேடினர்.

அங்கே தேவாலயத்தில் போதகர் நடுவில் இயேசு உட்கார்ந்திருந்ததைக் கண்டார் கள். அதுவுமன்றி, போதகர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண் டும், போதகர்களிடத்திலே இயேசு கேள்விகளைக் கேட்ப தையும் பார்த்தனர். இயேசுவின் பேச்சைக் கேட்ட யாவரும் இயேசுவின் புத்தியையும், மிகவும் ஞானமாக அவர் கூறிய பதிலையும் கண்டு பிரமித்து நின்றார்கள்.

இயேசுவின் பெற்றோரின் கண்களில் இப்போது ஆனந்தக் கண்ணீர் பெருகியது. மகிழ்ந்து தேவனைத் துதித்தார்கள்.



## செய்தி

**நாம் எங்கிருந்தாலும் தேவனுக்குச் சேவைசெய்யலாம்.**

ஆனாலும் மிகுந்த தவிப்புடன் மரியாள் இயேசுவின் அருகே வந்தார்கள். "மகனே, உன்னை எங்கெல்லாம் தேடினோம்; ஆனால், நீ எங்களிடம் சொல்லாமல் இங்கேயே இருந்துவிட்டாயே" என்றார்கள். அப்போது இயேசு, "என் பிதாவின் காரியங்கள்தானே எனக்கு முக்கியம். இது உங்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டார். ஆயினும் தன் பெற்றோருடன் நாசரேத்தி லுள்ள தங்களின் வீட்டிற்குத் திரும்பினார். அங்கே தம் பெற்றோருக்குக் கீழ்ப்படிந் திருந்தார்.

என் கண்மணியே! நீயும் இயேசுவைப்போல உன் பெற்றோருக்குக் கீழ்ப்படி; அதே வேளையில் தேவனுக்கே முதலிடம் கொடு.

***செய்முறை:*** *பஸ்கா பண்டிகை முடிந்து வீடு திரும்பியபோது யோசேப்பும் மரியாளும் இயேசுவைத் தொலைந்துவிட்டார்கள். அவர்கள் மீண்டும் இயேசுவைக் கண்டறிய வழிகாட்டி உதவு.*

## புதிர் 5

